
விவேகானந்த பாஸ்கரம்

சுவாமி ஆத்மானந்த



ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம்,

பசுபதிபாளையம், கரூர் - 4.



மன்னர் பாஸ்கர சேதுபதி
இராமநாதபுரம்

தோற்றம்	மறைவு
3-11-1868	27-12-1903

விவேகானந்த பாஸ்கரம்

(சுவாமி ஆத்மானந்த)



ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம்,
பசுபதிபாளையம், கரூர்-639 004.
போன்: 04324 - 341301.

ஸ்ரீமத் சுவாமி
கௌதமானந்தஜீ மகராஜ்
தலைவர், ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்.

மயிலாப்பூர்,
சென்னை-4.
17-8-2001

வாழ்த்துரை

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தனது பெருமைமிகு பாரம்பரியத்தால் தலைநிமிர்ந்து நிற்பது பாரத நாடு. எத்தனையெத்தனையோ மேதைகள் தோன்றி, அந்தப் பாரம்பரியம் சிறக்க வாழ்ந்ததன்மூலம் அது குலையாமல் இன்றும் நிலைநிற்க வகை செய்தனர். அவர்களது நினைவினைப் போற்றுவது நமது கடமையாகும்.

அத்தகைய பாரம்பரியத்தில் நமக்கு மிகச் சமீபகாலத்தில் தோன்றியவர் சுவாமி விவேகானந்தர். தனது ஒப்பற்ற தவ வாழ்வாலும் அறிவுச் செல்வத்தாலும் சொல் வன்மையாலும் பாரத நாட்டை உலக அரங்கில் ஒளிரச் செய்தவர் அவர். சுவாமி விவேகானந்தருக்கும் தமிழ்நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவர் தமது பணிக்காக தமிழர்களைப் பெரிதும் நம்பினார்; தமிழ்நாட்டிற்கு இருமுறை வந்து தமிழ் மண்ணைப் புனிதப்படுத்தவும் செய்தார். அவர் அமெரிக்காவில் சர்வமத மகா சபையில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மிக முக்கிய இடம் வகித்ததும் தமிழ் மண்ணே. அதில் ராமநாதபுர மன்னரான பாஸ்கர சேதுபதியின் பங்களிப்பும் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த அரிய திருப்பணியை மேலும், காலம் தாழ்த்த விடாது இறை அருளால் விரைவாக நிறைவு செய்வதற்கு உதவுவது நமது கடமை.

"நிதி மிகுந்தோர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தோர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்"

என்ற அமரகவி பாரதியின் வாக்கினை நினைவு கூர்ந்து அனைத்து மக்களும் இந்த திருப்பணிக்கு உடனே உதவ வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

டாக்டர் S.M. கமால்.

எனது துணிவுடை இளைஞர்காள் ! நீங்கள் அனைவரும் பெரும்காரியங்களைச் செய்யப் பிறந்தவர்கள் என்ற நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டி நாய்களின் குரைத்தலைக் கண்டு நடுங்காதீர் ஆகுக. வானத்தே முழங்கும் இடிக்கும் அஞ்ச வேண்டாம். எழுந்து நின்று வேலை செய்யுங்கள்.

நமது தாய்நாட்டின் இளைஞர்களே ! இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காகவே விதியால் நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று நம்புங்கள். இத்தகைய ஆக்கபூர்வமான நற்பணிகளில் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக முழுமனதுடன் ஈடுபடுங்கள்.

-சுவாமி விவேகானந்தர்

எனது உணர்வுரை

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பது அப்பர் பெருமானது அருள்வாக்கு.

"துறவும் தொண்டும்" என்பதே எங்களது வாழ்வின் உயர்நோக்கு.

எழுமின்! விழிமின்! குறிசாரும் வரை நில்லாது செல்மின்! என்பதே எங்களை ஊக்குவிக்கும் விவேகானந்த வீரவாக்கு.

"**விவேகானந்த பாஸ்கரம்**" உருவாக்கும் எங்களது அறப்பணிக்கு அன்பும் ஆசியும்; ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிவரும் **பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்த மகராஜ்** அவர்களது திருப்பாதங்கள் எமது சென்னிமிசை.

"என்கடன் தமிழ்ப்பணியே; எனது மூச்சும் பேச்சும் தமிழ்ப் பணிக்கே" என்ற குறிக்கோளைக்கொண்டவர்; வள்ளுவத்தின் வழியில் வாழ்வாங்கு வாழும் வான்புகழாளர்; வள்ளுவத் தெய்வத்துக்குத் "தவச்சாலை" அமைத்த தமிழ்ச் சான்றோர்; தமிழ்த் தாய்க்கு நூல்பல சமைத்துப் படைத்த நுண்ணறிவாளர்; திரு. **இரா. இளங்குமரனார்** இந்நூலுக்களித்த மதிப்புரை எமது உயிராம் பயிர்க்கு அளித்த "**உயிர்க் களிப்பே**".

சேது மன்னர்களது வீர வரலாற்றினையும், ஆட்சித் திறனையும், வள்ளல் தன்மையினையும், தமிழ்த் தொண்டினையும், தெய்வ பக்தியினையும் தமிழக மாந்தர் அறிய நூல்கள் பல எழுதிய சான்றோர் திரு. டாக்டர் **S. M. கமால்** இந்நூலுக்கு அணிந்துரை அளித்துள்ளார்கள். "**விவேகானந்த பாஸ்கரம்**" உருவாவதில் அவரது உள்ளத்திற்கு ஆனந்தக்களிப்பு. அந்தப் பண்பாளரது அன்பும், இன்முகமும் என்றும் எமது நினைவகத்தில்.

அன்பும் வணக்கமும்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம், இறைவன் தொண்டில்
பசுபதிபாளையம் P/O, கரூர் - 4. **ஆத்மானந்த**
1 - 9 - 2001. Ph : 04324 - 341301.

விவேகானந்த பாஸ்கரம்

(சுவாமி ஆத்மானந்த)

(நாட்டு மக்களுக்கு ஒரு விண்ணப்பம்)

பாரதத்தின் பெருமையினையும், பழமையினையும், இந்து மதத்தின் ஈடுஇணையற்ற ஏற்றத்தினையும் உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தரேயாவார். இதில் இரண்டாவது சிந்தனைக்கே இடமில்லை. இதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவர். மேலைநாடுகளும் கீழைநாடுகளும் இணையவேண்டும், இணைந்து செயல்பட வேண்டும். கொண்டும், கொடுத்தும் வாழ வேண்டும். மேலை நாட்டு விஞ்ஞானமும் கீழை நாட்டு மெய்ஞ்ஞானமும் ஒருங்கிணைந்து உலக நலனின் பொருட்டுச் செயல்பட வேண்டும் என்ற நெடு நோக்கோடு கிழக்குக்கும் மேற்குக்கும் பாலம் அமைத்தவர் சுவாமி விவேகானந்தரேயாவார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. ஏழ்மையும், வறுமையும், அறியாமையும், பொறாமையும், ஜாதி மத இன வேறுபாடுகளும் நாட்டு மக்கள் வாழ்வைச் சீர்குலைத்தன. சுருங்கக் கூறின் பாரதம் பாழ்பட்டுக் கிடந்தது. நாட்டு மக்கள் தங்களது பாரம்பரியத்தை அடியோடு மறந்தனர். தங்களது

கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் இழந்தனர். உன்னதமான லட்சியங்களெல்லாம் உதாசீனப்படுத்தப்பட்டன.

ஆங்கிலக் கல்வி கற்றோரில் பெரும்பாலோர் மேலை நாட்டு மோகம் கொண்டு திரிந்தனர். தங்களை முற்றிலும் ஆங்கிலேயர்கள் என்றே கருதிக் கொண்டனர். நடையுடை பாவனைகள் அனைத்திலும் மேலை நாட்டாரைப் போன்றே நடித்தனர். இந்தியாவில் வாழும் அந்நியர்களாகக் காட்சியளித்தனர். பூஜை, வழிபாடு, கோவில்கள் ஆகியவை பொருளற்றவைகள் என்று புறக்கணிக்கப்பட்டன. உருவ வழிபாட்டை உதாசீனப்படுத்திப் பேசினர். சீர்திருத்தம் என்ற பெயரில் தேசீயக் கலாச்சாரத்தை சீர்குலைக்க முயன்றனர். நாகரிகம் என்ற பெயரில் மேலைநாட்டு நவ நாகரீக மோகத்தில் மூழ்கித் திளைத்தனர். பல்லாயிரம் ஆண்டுகளாகக் கட்டிக்காத்த மதச் சம்பிரதாயங்கள், உன்னதமான லட்சியங்கள், பாரமார்த்திகக் கோட்பாடுகள், ஆன்மீகப் பாரம்பரியங்கள் எல்லாம் அழிந்து போய்விடுமோ என்று ஆன்றோர்கள் கவலையுற்று நெஞ்சு புழுங்கலாயினர்.

"எப்பொழுதெல்லாம் தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கின்றதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் தோற்றுவித்துக் கொள்ளுகிறேன். நல்லவர்களைக் காப்பதற்கும் கெட்டவர்களை அழித்து ஒழிப்பதற்கும்

6-1

ராமநாதபுர மன்னரின் விருந்தினராக சுவாமி விவேகானந்தர் ராமேசுவரத்தில் தங்கிய இடம் "**விவேகானந்த பாஸ்கரம்**" என்ற வீடாகும். அதனை இருவருக்குமான ஒரு நினைவு மண்டபமாக அமைக்கின்ற மாபெரும் பணியை கரூர் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமத்தினர் மேற்கொண்டுள்ளனர். இந்தப் பணியில் பங்கெடுப்பது பெறற்கரிய பேறாகும். இந்தப் பணி விரைவில் நிறைவேறி நாட்டு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைய வேண்டுமென்று எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

-சுவாமி கௌதமானந்த

வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியையும், பெரும் மன உறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும். விடாமுயற்சி உடையவன், "சமுத்திரத்தையே குடித்துவிடுவேன்", "எனது சங்கல்பத்தால் மலைகள் நொறுங்கி விழுந்தாக வேண்டும்" என்று சொல்லுகிறான். அத்தகைய ஆற்றலை, மன உறுதியை நீ பெற்றிரு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை நீ அடைவாய்.

மனிதர்கள், மனிதர்களே நமக்கு வேண்டும். மற்றவை அனைத்தும் தயாராக வந்து சேரும். ஆனால் வலிமை மிக்க, சுறுசுறுப்பான சிரத்தை பொருந்திய இளைஞர்கள்; உண்மையில் பிடிப்புக் கொண்ட இளைஞர்களே தேவை. அத்தகைய ஒரு நூறு இளைஞர்களால் இந்த உலகமே புரட்சிகரமான மாறுதலைப் பெற்றுவிடும்.

-சுவாமி விவேகானந்தர்

இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர் - 620 101.
திருச்சி மாவட்டம்.

உயிர்க் களிப்பு

மதிப்புரை

"துளசி, பிறக்கும் போதே மணத்தோடு பிறக்கிறது! முல்லை, படர்ந்து இடையே மலர்ந்து மணம் பரப்புகிறது! வாழை இறக்கும் போது கனிதந்தும் கால்வழி தந்தும் சிறக்கிறது! இம்மூன்றனுள் யான் பெற்றதென்ன? மண்ணுக்குச் சுமை தானா யான்?" என ஏங்குகிறார் ஒருவர். அவர் எண்ணம் பாட்டாகிறது:

"பிறக்கும் போதே துழவாகப்
பிறங்கும் பேறு பெற்றேனோ?
சிறக்கும் காலை முல்லையெனச்
சீர்மை எய்தி வளர்ந்தேனோ?
இறக்கும் காலை வாழையென
ஏற்றம் எய்தி மறைவேனோ?
மறக்கப் பிறந்து வளர்ந்தேனே!
மண்ணின் சுமையாய் மடிவேனோ!"

என்பது அது.

ஆம்! பலப்பலர் வாழ்வு மண்ணின் சுமையாகவே ஒழிகின்றது. சிலருள் சிலர் வாழ்வோ, பிறப்பாலும், வளர்ப்பாலும், இறப்பாலும் சிறப்பு மிக்கதாகவே திகழ்கின்றது.

ஒருவர் வாழ்ந்த காலம் எவ்வளவு என்பது தக்க மதிப்பீடு ஆகாது! அவர் வாழ்ந்த நாளில், அவர் செய்து முடித்த செயற்கரிய செயல்களும், வாழ்ந்து காட்டிய நெறியுமே "மதிப்பீடு ஆகிவிடுகின்றன"!

இச்சிறு சுவடியில் வருபவர் இருவர் ; ஒருவர் விவேகானந்தர்; ஒருவர் பாற்கரர். (பாஸ்கர சேதுபதி)

விவேகானந்தர், வங்கத்தார்	:	பாற்கரர் தமிழகத்தார்.
விவேகானந்தர், துறவர்	:	பாற்கரர், மன்னர்.
விவேகானந்தர், வாழ்ந்த காலம்	:	39 ஆண்டுகள் (1863 -1902)
பாற்கரர் வாழ்ந்த காலம்	:	35 ஆண்டுகள் (1868 - 1903)

எப்படி இருவரும் இணைந்தனர்?

"ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்" ஆயினர்.

இருவரும் ஆங்கிலம் கற்றவர்கள்; இருவரும் தாய்மொழிப் பற்றாளர். "ஆங்கிலம் கற்றார்; அதற்கே ஆவியும் தந்தார்; ஆங்கிலராகவே ஆனார்" என்னாமல், ஆங்கிலப் பாலத்தில் நடந்து, அவரவர் மொழிநலம் நாடி, அவரவர் நிலையில் கடனாற்றினார்.

"பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே"

எனக்கொண்டனர்.

பாற்கரருக்கு ஒரு பிறவிப்பேறு; அது "சேது காவலர்" என்னும் நிலை!

விவேகானந்தருக்கு ஒரு வீறு; இராம கிருட்டிணர் என்னும் தவப் பெரியாரைக் குருவராகக் கொண்டமை!

வடக்கும் தெற்கும் இணைய, ஓர் அரிய வாய்ப்பு!

"குமரியொடு வட விமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்" என்பது இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றி, அவன் மகனார் இளங்கோவடிகள் வழங்கிய பட்டயம்.

"ஒரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த போரில்", களத்து நின்றார் அனைவருக்கும் பெருஞ்சோறு வழங்கிய பெருஞ்சேரலாதன் என்பது, புறப்பாடல் செப்பேடு.

"இமசேதுபரியந்தம் எதிரிலாக் கற்ற கவிவீரராகவன்" என்பது கவிவீரராகவர் தந்நிலை விளக்கம்.

"முகத்துக்கு முகம் கண்ணாடி"
"புலமிக்கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்"

விவேகானந்தரைக் காண்கிறார் பாற்கரர்! ஆழ்மனத்தில் ஓரலை! அது பேரலை!

"அமெரிக்காவில் நிகழவிருக்கும் அனைத்துலகச் சமய மாநாட்டில் கலந்து கொள்ள யான் விரும்பி ஏற்பாடு செய்துள்ளேன்; யான் ஆங்குச்செல்வதினும், இச்செங்கதிர் செல்வது பேரொளிப் பெருக்காகுமே" என்று உள்ளுள் முடிவு கண்டது பாற்கதிர். "யான், நெடிது வாழவைக்கும் நெல்லிக்கனியை உண்டு வாழ்வதனினும், தமிழ் வாழ்வாகிய

ஔவையார் உண்டு நெடிது வாழ்வது தக்கதாம்" என்று முடிவெடுத்த அதியமான் உள்ளம் "அது". "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்னும் கிள்ளிவளவன் உள்ளம் அது.

ஆண்டு 1893, அப்பொழுது விவேகானந்தர் அகவை : 30; பாஸ்கரர் அகவை : 25, மணிவிழா, முத்துவிழா, பவழவிழா. வயிரவிழா கண்டவர்க்கும் வருமா இப்பேருள்ளம்!

தமிழ் வாழ்வினராகிய தம் தமையன் பாண்டித்துரை, சங்கம் நிறுவிய நாளில் (1901) முற்றாக அதற்கு உதவநின்ற பெருமகனார், தம் நாட்குறிப்பிலேயே தமிழ்ச்சங்கம் காணுதலைக் குறிக்கோளாக எழுதி வைத்தவரும், பாண்டித்துரைக்கு முன்னதாகவே தமக்குப் பெரும்பிரிவு ஏற்பட வேண்டும் என்று பொறித்துக் கொண்டவரும், தாமரை இலை தழுவு நீராக வாழ்ந்தவரும் ஆகிய பாற்கரருக்கு வந்த பேருள்ளம் வியப்பிற்கு உரியதன்றாம்!

ஆனால்; அந்நலப்பேற்றைப் பெற்று, உலகம் உவக்கக் கடனாற்றித் திரும்பிய விவேகானந்தருக்கு ஒரு வேட்கை -பெரு வேட்கை! "உலகச் சமய மாநாட்டுக்குப் போதலைப் பற்றி எண்ணமே இன்றி இருந்த எம்மை, அழுத்தமாகத் தூண்டி - பல்கால் வேண்டி வேண்டுவவெல்லாம் செய்துதவிய செம்மல் பாற்கரருக்கு யாம் என்ன கைமாறு செய்ய முடியும்?

"எந்த வேந்தர் எம்மை வெளிவுலகுக்கு விடுவித்தாரோ, அவர் ஆளும் மண்ணிலேயே என் அடியை வைத்து இறங்கி, எம் நன்றிக் கடன் தீர்த்தல் வேண்டும்" எனமுடிவு கொண்டார்!

தக்கோர் தக்க முடிவே செய்வார்! என்பதற்கு இருவரும் எடுத்துக்காட்டு ஆயினர்! விவேகானந்தர் உள்ளம் அதுவானால் பாற்கரர் உள்ளம் எதுவாம்?

எதிர்பார்த்து எதிர்பார்த்து வரவேற்கப் பூரிப்புடன் காத்திருந்த பாற்கரர், பாம்பன், இராமேஸ்வரம், இராமநாதபுரம், மதுரை முதலாய இடங்களில் எல்லாம் வரவேற்றுப் பிறவிப் பயனெனப் பூரித்தார்.

விவேகானந்த முகில் தம் நன்றியை ஓரிடத்திலேயா பொழிந்தது! இல்லை! மூன்று இடங்களில்! அப்பொழிவுதான் என்ன?

"எனக்களித்த இந்த வரவேற்புக்கு எனது நன்றியை ஏற்பீராக. இராமநாதபுரம் அரசர் என்மீது கொண்டுள்ள அன்புக்கு எவ்வாறு நன்றி தெரிவிக்கவல்லேன்! நான் ஏதேனும் நற்பணி செய்திருந்தால் அதற்குக் காரணம் இவரே. இந்தியா இவருக்கே கடமைப்பட்டுள்ளது.

"அமெரிக்க நாட்டில் நடைபெறும் அனைத்துச் சமய மாநாட்டுக்குச் செல்லும் எண்ணத்தை என்னுள் தூண்டியவர் இவரே. என் அருகே நின்று மிகுந்த களிப்புடன் நான் இன்னும்

நிரம்பச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். இவர்போல் இன்னும் ஐந்தாறு அரசர்கள் நம் அருமை நாடு முன்னேறவேண்டும் என்று ஆன்மீகத்துறையில் வளர்ச்சி காண முன்வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்'' என்றார்.

பாம்பன் வரவேற்பில் கூறிய இதனை, இராமநாதபுர வரவேற்பில் விரிவாக எடுத்துரைக்கின்றார். மதுரையிலும் தொடர்கிறார். இவற்றையெல்லாம், இச்சுவடி எடுத்துவைக்கிறது. பாற்கரர் "அரசமுனி" (இராசரிசி) என்று பாராட்டப்பட்டது, "விவேகானந்த பாற்கரம்" அமைந்த வகை, அதனால் விளையும் ஒருமைப்பாடு என்பவற்றையெல்லாம் அருமையாக விளக்குகிறது! வரலாற்று மெய்மம் உரைக்கிறது.

உயிர்க்கு ஊதியமாம், உயிர்க்குதவித் தொண்டிலே தம்மை முழுமையாக ஒப்படைத்துக்கொண்ட துறவர், குருவர், அடிகள் ஆத்மானந்தர். ஏதிலியர்க்குப் புகலிடமாக, கல்விக் கருவூல வள்ளலாக விளங்குபவர் அடிகள். பாலர் பள்ளி முதல் முதுகலைக் கல்வி பெறும் வரை நிறுவனங்கள் ஆக்கியவர், ஆக்கிவருபவர்! தமிழ்வழிக் கல்வியையும் தமிழ்ப்பற்றையும் தாங்கி நடமாடுபவர்.

இராமகிருட்டிணர் விவேகானந்தர் சித்பவானந்தர் விளக்கமாக இருப்பதுடன் திருக்குறள், திருவாசகம், தாயுமானம், கீதை, முற்றோதும் முறைமையாளர். கருவூரிலே விவேகானந்தருக்குப் பொலிவுமிக்க மணிமண்டபம்

எடுத்தும், அருங்காட்சியகமாகத் திகழும் அரங்கம் அமைத்தும், எதிர்காலத்தில் சுற்றுலா நிலையமாக அமையும் பேற்றுக்கு அடிகோலுபவர். எதிர்காலப் பல்கலைக்கழகமெனத் தம் கல்லூரி வளாகத்தை வளர்ப்பவர். புகழும் விரும்பாப் புகழ்த் தொண்டர். "புகழ்ந்தவை போற்றிச்செயல் வேண்டும்" என்னும் ஊக்குதலால், பலப்பல கோடி செலவிட்டும் விவேகானந்த பாற்கர மாமணிமண்டபம் எடுக்கக் கிளர்ந்தவர். அவர்தம் வேண்டுகை, இச்சுவடி.

பிறர் துயரம் துடைத்தற்குத் தாவும் கைகள்,
பெரியோனின் பேரருளைக் கூப்பும் கைகள்,
பிறர் துயரம் துடைத்தற்குப் பேசும் வாய்கள்,
பெரியோனின் பேரருளை வாழ்த்தும் வாய்கள்,
பிறர் துயரம் துடைத்தற்கே எண்ணும் நெஞ்சம்,
பெரியோனின் பேரருளில் நிலைத்த நெஞ்சம்,
மறவாமல் இந்நோன்பு கொண்டார் அன்றே
மலர்மிசையோன் மாணடிக்கண் சேர்ந்தார் அன்றே"

என்று இறைப்பணியை மக்கட் பணியாக மேற்கொண்ட அடிகள் எண்ணம் வெல்வதாக!

ஒருநாள் அடிகள் தவச்சாலைக்கு எழுந்தருளினார். அது முதல் வரவு, அவர் பெயரை எண்ணினேன்! தமிழின் அழகு புலப்பட்டது!

"உயிர்க்கு அளிப்பு" உவகை அல்லவா! தருவார்க்கும் பெறுவார்க்கும் உவகை அல்லவா! "ஈத்துவக்கும் இன்பம்" என அதனை அருமையாகக் கூறுமே வள்ளுவம்!

"உயிர்க்கு அளிப்பு" என்பதை இணைத்தால் "உயிர்க்களிப்பு" ஆகுமே! ஆம்! "ஆத்மானந்தர் - உயிர்க்களிப்பர்" என 12-1-1995 நாட்குறிப்பில் எழுதினேன். அன்று தொட்டு இன்று வரை "நிறைமதி" என வளர்வது கண்டு பூரிப்படைகிறேன்.

"விவேகானந்த பாற்கரம்" தன் மணிக்கதிர் பரப்பி விண்ணோங்கி நிற்பதற்கு நம் பங்களிப்பு ஏதுவாக வேண்டும். பாரதியார் பாடினார்,

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!

என்று! இதனை அவரவர் நிலையில் மேற்கொள்ளல் அவரவர்க்கு "உயிர்க் களிப்பாம்" இன்பமே சூழ்க!

அன்புடன்
இரா. இளங்குமரன்

தமிழ் மணி
டாக்டர். S.M. கமால்,
தலைவர், தமிழ்ச்சங்கம்.

இராமநாதபுரம்,
6-7-2001

அணிந்துரை

இதிகாச கால சிறப்புடைய சேதுபதி மன்னர்களில் உயர்ந்த உத்தமராகப் போற்றப்படுபவர் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் (கி.பி. 1868 - 1903). இவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமையும், சைவசித்தாந்தத்தில் அழுத்தமான பற்றும் உடையவர். கேட்பார் பிணிக்கும் வண்ணம் சொற்பொழிவாற்றும் திறனுடையவர்; நாடி வந்த நலிந்தோர்க்கும், பாடிவந்த புலவருக்கும் பொன்னும் பொருளும் அள்ளி வழங்கும் பெரு வள்ளலுமாவார்.

இவரது சாதனைகளில் மிகவும் போற்றத்தக்கது, கி.பி. 1893 ல் அமெரிக்க நாட்டில் "சிக்காக்கோ" நகரில் நடைபெற்ற அனைத்து சமய மாநாட்டில் இந்தியப் பிரதிநிதியாக சுவாமி விவேகானந்தரை கலந்து கொள்ளச்செய்தது ஆகும்.

தமது நுண்மாண் நுழைபுலத்தாலும், வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவைகளில் பெற்றிருந்த ஆழ்ந்த பயிற்சியினாலும், ஆங்கில மொழியின் அற்புத புலமையினாலும், அந்த மாநாட்டில் கலந்து கொண்ட

பேரறிஞர்களையும், பொதுமக்களையும் பெரிதும் கவர்ந்த சுவாமிஜி அவர்கள் தொடர்ந்து, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளிலும் இந்திய நாட்டின் சமயம், பண்பாடு, கலைகள் பற்றிய சிறப்புகளை எடுத்து இயம்பி இந்திய நாட்டின் பெருமைகளையும், புகழையும் உலகறியச்செய்தார். மேலும், அவரது அரிய பணியினையும், இந்தியநாட்டையும் உலகமக்கள் மறந்து விடாமல் தொடர்ந்து போற்றுவதற்கு ஏதுவாக தம்து குருவான ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயரால் மடங்களை ஆங்காங்கு நிறுவினார்.

தாயகம் திரும்பும் வழியில் இராமநாதபுரம் சேதுபதி மன்னரது ஆளுகையில் அமைந்த பாம்பன் துறைமுகத்தில் 22-1-1897ல் கரை இறங்கினார். 24-1-1897 ஆம் தேதி இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வருகை புரிந்து அங்குள்ள இறைவனை தரிசனம் செய்தவுடன் பக்தகோடிகளுக்கு நல்லுரை நல்கியதுடன் அங்குள்ள சேதுபதி மன்னரது மாளிகையிலும் தங்கினார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க வீரத்துறவியின் சமயத்தொண்டையும், அவரது மேலை நாட்டு பயணத்திற்கு ஆதரவாக அமைந்து உதவிய மன்னர் பாஸ்கர சேதுபதியையும், காலமெல்லாம் இந்திய மக்கள் நினைவு கொள்ளும் வகையில் சுவாமிஜி அவர்கள் இராமேஸ்வரத்தில் தங்கிய அந்த புனித இடத்தில் (இந்த இடம் தற்பொழுது இராமேஸ்வரத்தில் இராமமந்திரம் என வழங்கப்படுகிறது) மிகச்சிறந்த நினைவாலயம் ஒன்றை நிறுவ வேண்டும் என்பது கரூரில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண ஆசிரமத்தின்

தலைவர் பூஜ்யஸ்ரீ ஆத்மானந்த சுவாமி அவர்களது அரிய திட்டமாகும்.

இந்த உன்னதப் பணியினை பொதுமக்களுக்கு உணர்த்துவதற்கு அவர்கள் வரைந்துள்ள "விவேகானந்த பாஸ்கரம்" என்ற இந்த நூல், இதில் சுவாமி விவேகானந்தர் அவர்கள் அமெரிக்க நாட்டிற்கு மேற்கொண்ட பயணம், அங்கு சுவாமிகள் ஆற்றிய சொற்பொழிவு, தமது அரிய தொண்டிற்கு உறுதுணையாக அமைந்த இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு பாம்பன் துறைமுகம், இராமநாதபுரம், மதுரை ஆகிய ஊர்களில் வழங்கிய நன்றியுடன் கலந்த புகழுரை ஆகியவைகளை இந்த நூலில் ஆசிரியர் பொருத்தமாக தொகுத்து வழங்கியுள்ளார்.

மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க தமது விவேகானந்த பாஸ்கரம் - நினைவுச் சின்னம் அமைக்க வேண்டியதன் அவசியத்தையும் இந்த நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பூசலார்நாயனார் இறைவனுக்கு மிகச் சிறந்த ஆலயம் அமைத்து இறைவனுக்கு தொண்டு செய்து வந்ததைப் போல; நமது ஆத்மானந்த சுவாமிகள் அவர்களும் விவேகானந்த பாஸ்கரம் பற்றிய நினைவுச் சின்னம் திருப்பணியை பல மாதங்களாக தமது இதயத்தில் தாங்கி திட்டமிட்டதை இப்பொழுது இராமேஸ்வரத்தில் நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளார். அதிலும் சுவாமி விவேகானந்தர் அவர்களது நினைவு நூற்றாண்டு நாளான 4-7-2002ல் நிறைவு செய்ய எண்ணியுள்ளார்.

யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்'', என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மா நல்லோர்க்கு வாக்குறுதி கொடுத்துள்ளார்.

கீதாசாரியனின் வாக்கிற்கேற்பப் பாழ்பட்டுக் கிடந்த பாரதத்தை வாழ்விக்க வந்தவர் பகவான் ராமகிருஷ்ணர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் யுகாவதார புருஷர் என்று அவரைப் பகரலாம். ராமகிருஷ்ணர் வங்கத்தில் கமார்ப்புகூர் என்ற கிராமத்தில் அவதரித்தார். கல்கத்தாவிற்கு அருகிலுள்ள தட்சிணேஸ்வரக் காளிக்கோவிலில் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக இளம் வயதிலேயே அர்ச்சகராக அமர்த்தப்பட்டார். ஆன்மீக வாழ்வில் அவர் செய்த அரும் பெரும் ஆத்ம சாதனங்களெல்லாம் அங்குதான் பூரணத்துவமடைந்து பொலிந்தன. கோவில் பூஜாரியாக வாழ்வைத் தொடங்கிய அவர் பரமஹம்சராகப் பரிணமித்துப் பகவான் ரா்மகிருஷ்ணரெனப் பெயர் சூட்டப்பட்டார். அவதாரபுருஷரென அனைவராலும் ஆராதிக்கப் பெற்றார். அவரது தலைத்தரமான முதன்மைச் சீடர்தான் சுவாமி விவேகானந்தர்.

தூய்மையே வடிவெடுத்த துடிப்பு மிக்க இளைஞர். நவீனக் கல்வி கற்ற அறிஞர். அப்பழுக்கற்ற இதயம் கொண்டவர். பரமஹம்சரால் பதப்படுத்திப்

பக்குவப்படுத்தப்பட்ட பரிசுத்த ஆத்மா. ஆன்மீக ஐயங்கள் அனைத்தும் அடியோடு அகலப்பெற்றவர். சாஸ்திரங்கள் கூறும் உண்மைகளையெல்லாம் அனுபவத்தால் உணர்ந்தவர். நரரூபம் தரித்து நடமாடிய நரோத்தமன். புலக்குறும்பறுத்த புனிதன். நைஷ்டிக பிரம்மச்சாரி. வேதகால ரிஷிகளின் மறுபிறப்பு. தேசத்தை உய்விக்கத் தோன்றிய உத்தமர். வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை கண்ட வித்தகச் சித்தர். உலகெங்கணும் வேதாந்தக் கருத்துக்களை கர்ஜித்து முழங்கிய வேதாந்தகேசரி. ஏழை எளியவர்களுக்காக கண்ணீர் வடித்த கருணைவள்ளல், சமுதாயத்தினரால் நசுக்கப்பட்டவர்களுக்காக, ஒடுக்கப்பட்டவர்களுக்காக நெஞ்சம் நைந்து உருகிய மகாத்மா. மாந்தரது அக இருளகற்றும் ஞான பாஸ்கரராவார் சுவாமி விவேகானந்தர்.

பகவான் ராமகிருஷ்ணரது மகா சமாதிக்குப் பின்னர் அகண்ட பாரதத்தைத் தரிசிக்க விரும்பினார் சுவாமி விவேகானந்தர். அதன் பொருட்டு இமயம் முதல் குமரி வரை நாடு நெடுகிலும் கால்நடையாகவே அவர் சஞ்சாரம் செய்தார். காடுமேடுகள், வயல்வரப்புகள், நாடுநகரங்கள், பட்டிதொட்டிகள், குடிசை கோபுரங்கள் எல்லாவற்றையும் அவர் கண்டு களித்தார். வடகோடி இமயத்திலிருந்து, தென்கோடி குமரிமுனை வரையிலும் நாடு நெடுகிலும்

அவரது பாதச் சுவடுகள் பதிக்கப்பட்டிருக்கின்றன. கற்றவர் கல்லாதவர், பாமரர் பண்டிதர், அரசன் முதல் ஆண்டி வரை அவர் அனைவரையும் சந்தித்தார். அனைத்துத்தர மக்களோடும் அவர் உண்டு, உடுத்து, உறங்கி, உரையாடி மகிழ்ந்தார். ஆயினும் அவருடைய இதயத்தில் இடம் பிடித்தோர் யாரோ ஒருசிலர்தான். அந்த ஒருசில மேன்மக்களுள் ராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியும் ஒருவராவார்.

பண்டைநாளில் தமிழகத்தை மூவேந்தர் அரசாண்டனர். சங்க இலக்கியங்களில் அவர்களது ஆட்சித்திறனையும், வீரத்தின் மேன்மையினையும், கொடைத்தன்மையினையும், கல்வி மேம்பாட்டினையும் காண்கின்றோம்.

சங்ககால அரசர்களைப் போன்று இக்காலத்தில் யாராவது இருந்திருக்கின்றார்களா என்ற கேள்வி எழலாம். கல்வியிலும், கொடையிலும், வீரத்திலும், தெய்வபக்திலும், மனிதநேயத்திலும், மானுடப்பண்பிலும் விஞ்சி நின்ற அரசர்கள் இருந்திருக்கின்றார்களா என்ற கேள்வி எழலாம். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியே ஆவார். மன்னர் பாஸ்கர சேதுபதியின் புகழ் வரலாற்றில்

மறைக்கப்பட்டுவிட்டது, மறக்கடிக்கப்பட்டுவிட்டது.

அவர்தம் வாழ்வு தமிழர்தம் ஒப்புரவிற்கோர் எடுத்துக்காட்டாகும். தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்ச்சங்கம் நிறுவுவதற்கும், கலைகளின் வளர்ச்சிக்கும், கோயில்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும், ஆலயங்களில் முறையாக வழிபாடு நடப்பதற்கும், புலவர் பெருமக்களைப் போற்றுவதற்கும் வாரிவாரி வழங்கிய வள்ளல். எல்லாவற்றிற்கும் மேலாகச் சுவாமி விவேகானந்தர் மேலை நாடு செல்லுதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்தவர். சுவாமிகளின் அன்பிற்கும் பாராட்டுதலுக்கும் மிகவும் பாத்திரமானவர். "**விவேகானந்த பாஸ்கரம்**" என்ற பெயரில் இருவருக்கும் நூற்றாண்டு நினைவு மண்டபம் ஒன்று எழுப்புவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

19-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் எத்துணையோ சிற்றரசர்கள் ஜமீன்தார்கள் இருந்திருக்கிறார்கள், அந்நாளைய இந்தியா 56 தேசங்களைக் கொண்டது என்பர். 56 அரசர்களும், ஆயிரக்கணக்கான ஜமீன்தாரர்களும் இருந்தார்கள். இவர்கள் அனைவரிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராய் விளங்கியவர் மன்னர் பாஸ்கர சேதுபதியாவார்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பதும்

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத் தாற் காணப்படும்"

என்பதும் திருவள்ளுவம்.

1893-ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தர் இராமநாதபுரம் மகாராஜா பாஸ்கர சேதுபதியைச் சந்திக்கின்றார். "பாம்பறியும் பாம்பின்கால்" என்பதற்கேற்ப இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளுகின்றனர். ஆங்கிலமும், வடமொழியும், தமிழும், சமய நூல்களையும் நன்கு கற்றறிந்த பாஸ்கர சேதுபதியுடன் உரையாடிய சுவாமிகள் அரசனது பண்பட்ட, பக்குவப்பட்ட நிலை கண்டு மகிழ்ந்தார்.

அதேபோன்று சுவாமிகளிடம் மிளிர்ந்த ஆத்ம சக்தியையும், கரைகாண இயலாக் கடலனைய புலமையினையும், சாஸ்திர ஞானத்தையும், அவரது தேஜஸ்மிக்க திருவுருவத்தையும், ஞான ஒளிபடைத்த கண்களையும், உறுதிகொண்ட தோளினையும், வெல்லுதற்கரிய சொல்லாற்றலையும் கண்ட பாஸ்கர சேதுபதியும் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தார். தாம் வெறும்

மண்ணாளும் மன்னன்தான்; ஆனால் சுவாமிகளோ; மண்ணையும் விண்ணையும் அளந்தாலும் அளக்க இயலா ஆத்மசக்தியும் ஞானமும் மிக்க தவராஜன் என்பதை அறிந்து கொண்டார்.

அமெரிக்காவில் நடக்கும் சிகாகோ சர்வமத மகா சபையில் சுவாமிகள் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். தான் செல்ல வேண்டும் என்று நினைத்த கருத்தினை மாற்றிக்கொண்டு, தான் செல்லுவதிலும் சுவாமிகள் சென்று இந்து மதத்தின் ஏற்றத்தினை எடுத்து இயம்புவதே சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார். சாதாரண ஒரு மன்னனுடைய வாக்கைவிடத் துறவி ஒருவரின் வாக்கிற்கு மக்களைத் தன்பால் ஈர்க்கும் சக்தியும், மக்களது உள்ளங்களைத் தொடும் சக்தியும் நிறைந்திருக்கும் என்பதை நினைவூட்டிச் சுவாமிகளை அமெரிக்கா செல்ல வற்புறுத்தினார். ஆரம்பத்தில் மறுத்த சுவாமிகள் இறுதியில் இறைவன் திருவுள்ளப்படி நடக்கட்டும் என்று கூறி ஒப்புக் கொண்டார்.

மன்னர் பாஸ்கர சேதுபதியும், சென்னை அன்பர்களும் சேர்ந்து சுவாமி விவேகானந்தர் மேலைநாடு செல்லுவதற்குரிய ஏற்பாடுகளையும், பொருளுதவியும் செய்து அனுப்பி வைத்தனர்.

அமெரிக்கா சென்ற சுவாமிகளுக்கு எத்தனையோ சங்கடங்கள், கஷ்டங்கள், எதிர் நோக்கியிருந்தன. புதிய நாடு, புதிய மக்கள், புதிய பண்பாடு, புதிய கலாச்சாரம். உண்ணுதல், உடுத்துதல் அனைத்திலுமே புதுமையான அனுபவங்கள். இத்தனைக்கும் மேலாகப் புதிய நாட்டில் பொருளாதாரக் கஷ்டங்கள் வேறு.

சுவாமிஜி உறுதியான உள்ளம் படைத்தவர், எதையும் கண்டு கலங்காத நெஞ்சம் கொண்டவர். “பெருங்காரியங்களெல்லாம் பெருத்த இடையூறுகளுக்கிடையிலும், பெரும் தியாகத்தின் மூலமாகவும் தான் நிறைவேறும்” என்பதை நன்குணர்ந்தவர். பகவான் ராமகிருஷ்ணரது கூற்றில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர். “நரேந்திரன் உலகுக்கு உபதேசம் செய்வான். இந்த உலகையே தனது ஆத்ம சக்தியால் ஒரு குலுக்குக் குலுக்குவான்” என்று முன்பு குருதேவர் கூறியதெல்லாம் அவரது நினைவுக்கு வந்தன. தமது குருநாதர் எப்பொழுதும் தம்முடனேயே இருப்பதையும், எக்காலத்திலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் தமக்கு உறுதுணையாக இருந்து உதவி வருவதையும் நன்கு உணர்ந்தார். அதனால் தமக்கு நேர்ந்த கஷ்டங்களையெல்லாம் பொறுமையோடு சகித்துக் கொண்டார்.

"காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்"

என்பதும்

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்"

என்பதும் திருவள்ளுவம். உரிய காலம் வரட்டும் என்பதற்காகச் சுவாமி விவேகானந்தர் காத்திருந்தார்.

1893-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி சிகாகோவில் சர்வமத மகாசபை கூடியது. உலகில் பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மேடையின் மீது அமர்ந்திருந்தனர். நன்கு கற்றறிந்த அறிஞர்கள் சுமார் 7,000 பேர் அவையில் அமர்ந்திருந்தனர். தலைவர் பேசுவோரை ஒவ்வொருவராக அழைத்துச் சபைக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் ஒவ்வொருவரும் சிறப்பாக உரையாற்றி அமர்ந்தனர்.

சுவாமிகளின் முறை வந்தது. அவைத்தலைவரது அறிமுகத்திற்குப் பின்னர் சுவாமிகள் பேச எழுந்தார். அவையோர் முன்னிலையில் அவர் மேடையில் வந்து நின்ற கம்பீரத் தோற்றமே அனைவரது உள்ளங்களையும் கொள்ளை கொள்ளுவதாய் இருந்தது. அவையோரை நோக்கி: "அமெரிக்க நாட்டு சகோதரிகளே! சகோதரர்களே!" என்று அன்பினோடு அழைத்தார். அங்கு கூடியிருந்தோர்

அனைவருமே ஏதோவொரு மின்சக்தி தங்கள் உடலில் பாய்வது போன்று உணர்ந்தனர். இரண்டு நிமிடங்கள் ஓயாது கைதட்டிக் கரகோசம் எழுப்பினர். பலர் இருக்கைகளை விட்டு எழுந்து மேடையை நோக்கி ஓடினர். சுவாமிகளின் வாயிலிருந்து வெளிவந்த இரண்டே இரண்டு வார்த்தைகள் அவையோர் அனைவரையும் ஈர்க்கும் அத்துணை ஆற்றல் பெற்றிருந்தன. சுவாமிகள் தமது முதல் நாள் உரையைப் பேசி முடித்தார்.

முதல்நாள் பேசியவர்களில் சுவாமிகளின் உரையே தலைத்தரமானதாக இருந்தது. அன்று முதல் அவர் உரைக்காகவே கடைசிவரை அவையோர் காத்திருந்தனர். அன்று முதல் சுவாமிகளுக்கு உலகப் பெரும்புகழும் வந்துவிட்டது. இந்தியாவின் பெருமையும் உலக அரங்கினில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. சுவாமிகள் சுமார் நான்கு ஆண்டுகள் மேலை நாடுகளில் இந்து மதக் கோட்பாடுகளையும், வேதாந்தக் கருத்துக்களையும் பிரச்சாரம் செய்தார். 1897-ஆம் ஆண்டு ஜனவரி-15ஆம் நாள் தாய்நாடு திரும்பும் வழியில் கொழும்பு வந்து சேர்ந்தார். கொழும்பில் அவருக்கு மிகச் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழகம் அவருக்கு வரவேற்பளிக்கத் தயாராய்க் காத்துக்கொண்டிருந்தது. இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களே முன்னின்று இந்த

ஏற்பாடுகளைக் கவனித்தார். 1897-ஆம் ஆண்டு ஜனவரி 22-ஆம் தேதி யாழ்ப்பாணத்திலிருந்து சுவாமிஜியை ஏற்றிவந்த படகு பாம்பன் துறைமுகத்தை வந்தடைந்தது. மாமன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் பூரண கும்ப மரியாதையுடன் அவரை வரவேற்றார். மேளதாளங்கள் முழங்கின. சங்கு சேகண்டிகள், கொம்புகள் ஆர்ப்பரித்தன. மக்கள் ஆலத்தி எடுத்தனர். படகிலிருந்து சுவாமிகள் தரையில் இறங்கக் காலடி எடுத்து வைக்க முற்பட்டார். ஆனால் மன்னரோ, "சுவாமிஜி அவர்களே! தங்கள் பாதம் தரையில் படும்முன் முதலில் என் தலைமீது படட்டும். தங்கள் திருப்பாதத்தினை என் தலைமீது வைத்து இறங்குங்கள்" என்று வணங்கி வேண்டினார். ஆனால் சுவாமிகளோ அவ்வாறு செய்யாது தனது வலது காலைத் தரைமீது வைத்து இறங்கினார். தனது தாய்நாட்டின் புனித மண்ணை முத்தமிட்டார். அதனை வாரி எடுத்துப் புனித விபூதி எனத் தம் தலைமீதும் போட்டுக் கொண்டார். சுவாமிகளின் திருப்பாதங்கள் முதன்முதல் பதிந்த இடத்தில் வேறுயாரும் கால் வைக்கலாகாது என்று கருதிய மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள், அந்த இடத்தில் 40 அடி உயர நினைவு ஸ்தூபி ஒன்றை நிறுவினார். அந்த ஸ்தூபியில் "சத்தியமேவ ஜயதே" என்ற உபநிடதவாக்கினை மங்கலச் சொல்லாகப் பொறித்து வைத்தார்.

இதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு பின்னர் நாடு சுதந்திரம் பெறுகிறது. சுதந்திர நாட்டின் தேசியச்

சின்னத்தில் "சத்தியமேவ ஜயதே" என்ற அதே வாக்கியம் பொறிக்கப் பெற்றது. தமிழ்நாட்டின் கோபுரத்துடன் கூடிய அரசு சின்னத்திலும் "வாய்மையே வெல்லும்" என்னும் வாக்கியம் பொறிக்கப்பட்டிருக்கிறது. மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் நுண்மான் நுழைபுலம் மிக்க அறிவினையும், ஆழ்ந்த ஆன்மீக நாட்டத்தினையும், தீர்க்க தரிசனத்தையும், சுவாமிகள் மீது அவருக்கிருந்த அளவிடற்கரிய பக்தியினையும் இச்செயல்கள் மூலம் நாம் நன்கு கண்கூடாகக் காணுகின்றோம்.

பாம்பனில் சுவாமிகளுக்கு மிகச் சிறந்த வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த சுவாமிகளின் உரை நன்றிப் பெருக்கோடு கூடியதாகவும், உள்ளம் நெகிழ்ந்து உணர்ச்சிப் பெருக்கெடுத்தோடுவதாகவும் இருக்கிறது. சுவாமிகளின் நன்றியுரையின் சுருக்கம் பின்வருமாறு:

"மேன்மை தங்கிய இராமநாதபுரம் மன்னர் அவர்களே! எனக்கு நீங்கள் அளித்த மனம் நிறைந்த கனிவான வரவேற்பிற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை ஏற்றுக்கொள்ளுங்கள். மேன்மை தங்கிய இராமநாதபுரம் மன்னர் என்னிடம் கொண்டிருக்கும் அன்பிற்கு வார்த்தைகள் மூலம் நன்றி செலுத்துவது என்பது முடியாத

காரியம். என்னாலும், என் மூலமாகவும் ஏதாவது நற்காரியம் செய்யப்பட்டு இருக்குமேயானால் அது இந்த மனிதரால்தான். இந்தியா இந்த நல்ல மனிதருக்கு கடமைப்பட்டிருக்கிறது. நான் அமெரிக்காவில் நடக்கும் சிகாகோ சர்வமத மகாசபைக்குப் போக வேண்டும் என்று நினைத்தவரே இவர்தாம். அந்த எண்ணத்தை என் மனத்தில் எழுப்பியவரும், நான் அங்கு நிச்சயமாகச் சென்றாக வேண்டும் என்று இடைவிடாது வற்புறுத்தியவரும் இவர்தாம். இப்போதும் என்பக்கத்தில் நின்றுகொண்டு முன்பு போலவே, உற்சாகத்துடன் மேலும் மேலும் நான் பணிகளில் ஈடுபடவேண்டும் என்று எதிர் பார்க்கிறார். அன்பான நமது தாய்நாட்டின் உயர்விற்காக இவரைப்போல் இன்னும் ஐந்தாறு மன்னர்கள் இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று கூறினார்.

பாம்பனில் இருந்து சுவாமிகள் இராமேஸ்வரம் கோவிலுக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு கூடியிருந்த மக்கள் அவரிடம் ஒரிரு வார்த்தைகள் பேசுமாறு வேண்டிக்கொண்டனர். ஆங்கு சுவாமிகள் "உண்மை வழிபாடு" என்னும் கருத்தமைந்த பின்வரும் உரை நிகழ்த்தினார்.

"மதம் வாழ்வது அன்பில் தான். இதயத்தின்

தூய்மையிலும், உண்மையான அன்பிலும்தான் மதம் இருக்கிறதே தவிர வெறும் சடங்குகளிலல்ல. உடலாலும், மனத்தாலும், தூய்மையாக இல்லாமல் ஒருவன் கோவிலுக்கு வருவதும், சிவபெருமானை வழிபடுவதும் பயனற்றதாகும். அகமும் புறமும் தூய்மையாக இருப்போரது பிரார்த்தனைகளைத்தான் சிவபெருமான் நிறைவேற்றி வைப்பார்.

மனம் தூய்மையாக இருப்பதும், பிறருக்கு நன்மை செய்வதும்தான் வழிபாடுகள் அனைத்தின் சாரமாகும். ஏழைகளிடமும், பலவீனர்களிடமும், நோயுற்றோரிடமும் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபடுபவனாகின்றான். விக்ரகத்தில் மட்டுமே சிவபெருமானைக் காண்பவனின் வழிபாடு ஆரம்ப நிலையில் உள்ளதேயாகும். ஒரேஒர் ஏழைக்காயினும், அவனது ஜாதி, மதம், இனம் போன்ற வேற்றுமைகள் எதையும் பாராமல், அவனிடம் சிவபெருமானைக் கண்டு அவனுக்கு உதவிகள் செய்து தொண்டு புரிவோனிடம் சிவபெருமான் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகின்றார். கோவிலில் மட்டுமே தம்மைக் கண்டு தொழுபவனைவிட ஏழைகளிடம் தம்மைக் கண்டு தொண்டு புரிவோனிடம்தான் சிவன் அதிகம் மகிழ்ச்சியடைகின்றார்.

இறைவனுக்குச் சேவை செய்ய விரும்புகிறவர்கள்

முதலில் அவரது பிள்ளைகளுக்குச் சேவை செய்யவேண்டும். சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புகிறவர்கள் அவரது பிள்ளைகளாகிய இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் சேவை செய்யவேண்டும். தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே இறைவனின் மிகச்சிறந்த தொண்டர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இக்கருத்தை மனதிற்கொண்டு ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்யுங்கள்.

மீண்டும் சொல்லுகிறேன்: மனத்தூய்மையுடன் இருங்கள். உங்களை நாடிவரும் ஏழை எளியவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். இதுவே நற்செயல். இதன் பலனாக உங்கள் இதயம் தூய்மைபெறும். உயிர்கள் அனைத்திடத்தும் உறைகின்ற சிவபெருமான் வெளிப்பட்டுத் தோன்றுவார். அவர் எல்லோரது இதயத்திலும் எப்போதும் இருக்கிறார். அழுக்கும், தூசியும் படிந்த கண்ணாடியில் நம் உருவத்தைப் பார்க்க முடியாது. அறியாமையும் தீய குணங்களுமே நமது இதயக் கண்ணாடியில் படிந்துள்ள தூசியும் அழுக்குமாகும். மக்களுக்குச் செய்யும் சேவையின் மூலம் நமது இதயத்தைத் தூயதாக்கவேண்டும்.

சுயநலமில்லாதவனே உண்மையான ஆன்மீகவாதியாவான். அவன் ஒருவனே சிவபெருமானுக்கு

அருகில் இருக்கிறான். அவன் கற்றவனாக இருந்தாலும், கல்லாதவனாக இருந்தாலும் மற்ற அனைவரையும்விட அவனே சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான்" என்று உரையாற்றினார்.

1897-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் நாள் இராமநாதபுரத்தில் அரண்மனையில் சுவாமிஜி அவர்களுக்கு மிகச்சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்து சுவாமிஜி அவர்கள் பேசியதாவது:

மேன்மை தங்கிய இராமநாதபுரம் மன்னர் அவர்களே! இராமநாதபுரத்தின் குடிமக்களே! நீங்கள் அன்போடும், கனிவோடும் எனக்கு அளித்த வரவேற்பிற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் அன்பையும், கனிவையும் என்னால் உணரமுடிகிறது. ஏனெனில் வாய்ச்சொற்களை விட இதயத்துடன் இதயம் பேசுவதே உயர்ந்த மொழி. உயிருடன் உயிர் கலந்து, ஆழ்ந்த அமைதியில் அவை பேசுகின்ற அந்த மொழி சிறிதும் தவறில்லாத தூய மொழி. அதை நான் உள்ளத்தின் ஆழத்தில் உணர்கிறேன்.

மேன்மை பொருந்திய மன்னர் அவர்களே! மேலை நாடுகளில் நமது மதத்திற்காகவும் நம் தாய் நாட்டிற்காகவும் என்னால் ஏதாவது சிறிய தொண்டு செய்ய முடிந்தது என்றால்,

தங்கள் சொந்த வீடுகளிலேயே ஆழமாகப் புதைந்து கிடக்கின்ற விலை மதிப்பற்ற ரத்தினங்களை அறியாத நம் நாட்டு மக்களின் கவனத்தை அதன்மீது திருப்பி, அவர்களின் உணர்ச்சிகளை விழிக்கச் செய்ய முடிந்ததென்றால், அறியாமையாகிய குருட்டுத் தனத்தின் காரணமாகத் தாகத்தால் தவித்து வாடி, உயிர் பிழைக்கும் வழி தேடி எங்கோ உள்ள சாக்கடைத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தவர்களை அழைத்து தங்கள் சொந்த வீட்டிலேயே வற்றாமல் பொங்கிக்கொண்டிருக்கின்ற நிரந்தர ஊற்று நீரைக் குடிக்குமாறு என்னால் செய்ய முடிந்ததென்றால், நமது மக்களை விழிப்புணர்த்திச் செயல்படத்தூண்டி, எல்லாவற்றிலும் இந்தியாவின் உயிர்துடிப்பு மதம், மதம் மட்டுமே என்பதை புரியவைக்க என்னால் முடிந்தது என்றால், அந்த உணர்வு இல்லாது போனால் எத்தனை அரசியல்கள் இருந்தாலும், எத்தனை சமூகச் சீர்திருத்தங்கள் இருந்தாலும், இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் தலைமீதும் குபேரனின் செல்வத்தை கொட்டிக் குவித்தாலும் இந்தியா அழிந்துவிடும் என்று நான் அவர்களுக்கு உணர்த்த முடிந்ததென்றால் அதற்கான பெருமை முக்கியமாகத் தங்களையே சாரும்.

ஏனெனில் நீங்கள் தான் எனக்கு முதன் முதலில் இந்த எண்ணத்தை தந்தீர்கள். நீங்கள்தான் இடைவிடாமல் என்னை இத்தகைய சேவையில் தூண்டி வந்தீர்கள்.

எதிர்காலத்தை உள்ளுணர்வால் புரிந்து கொண்டது போல் நீங்கள்தான் என் கைகளை பிடித்து அந்தப் பணிகளுக்கு அழைத்துச் சென்றீர்கள். அதற்காக எல்லா வழிகளிலும் உதவினீர்கள். ஒருபோதும் தயங்காமல் இந்தப் பணியில் என்னை உற்சாகப் படுத்தினீர்கள். எனவேதான் எனது வெற்றியில் மகிழுகின்ற முதல் மனிதராக நீங்கள் இருக்கிறீர்கள். அதைக் காணவே நான் இந்தியாவிற்குத் திரும்பும் வழியில் உங்கள் மண்ணில் முதல்முதல் இறங்க நேர்ந்தது.

மேன்மைதங்கிய மன்னரே, தாங்கள் ஏற்கனவே கூறியதுபோல் மகத்தான வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளது. தத்துவத்தின், ஆன்மீகத்தின், பண்பின், இனிமையின், மென்மையின், அன்பின் தாயகம் இந்தப்பூமி. இந்தக் குணங்கள் இன்றும் இந்தப் பூமியில் நிறைந்து இருக்கின்றன. பல நாடுகளுக்குச் சென்றதில் கிடைத்த என் அனுபவங்கள் எனக்கு இதையே அழுத்தமாகத் தெரிவிக்கின்றன. உலக நாடுகளிலேயே இந்தியாவில்தான் இந்தக் குணங்கள் இன்றும் மிகச்சிறந்த அளவில் இருக்கிறது என்பதை உறுதியாக, தைரியமாக என்னால் சொல்ல முடியும்" என்று கூறினார்.

பரமக்குடி, மானாமதுரை, சிவகங்கை முதலிய இடங்களிலும் சுவாமிகளுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது.

1897 பிப்ரவரி 2-ஆம் தேதி சுவாமிகள் மதுரை வந்து சேர்ந்தார். அங்கே இராமநாதபுரம் மன்னரின் அழகிய மாளிகையில் தங்கினார். மதுரையில் வழங்கப்பட்ட வரவேற்பிற்கு சுவாமிஜி அளித்த பதிலாவது:

"மதுரை மாநகர மக்களே! உங்களுக்கு நன்கு தெரிந்தவரும், சான்றோருமாகிய இராமநாதபுரம் அரசரின் விருந்தினனாக மதுரையில் தங்கியிருக்கின்ற என் மனதில் ஓர் எண்ணம் மேலோங்கித் தோன்றுகிறது. சிகாகோவிற்குப் போக வேண்டும் என்கிற எண்ணத்தை முதன் முதலில் என் மனதில் புகுத்தியவரும், அதற்காகத் தம் இதயம் நிறைந்த உதவியையும், செல்வாக்கையும் எப்போதும் எனக்களித்தவரும் இவர்தாம். இது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். எனவே உங்கள் வரவேற்புரையில், என்னைப் பாராட்டிய பாராட்டுக்களில், கணிசமான பகுதி தென்னிந்தியாவின் அந்த உன்னத மனிதரையே சாரும். அவர் அரசராவதற்கு பதிலாக ஒரு துறவியாக ஆகி இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். அவர் அதற்கு முற்றிலும் தகுதியானவர்" என்று பாஸ்கர சேதுபதி மன்னரை வாழ்த்திப் பேசினார் சுவாமி விவேகானந்தர்.

பண்டை நாளில் அரசபதவி என்பது பாரம்பரியமாக வந்து வாய்த்தது. அரசுக் கட்டில் ஏறினோர் அனைவரும் அதற்கேற்ற தகுதியுடையோராய் இருந்தனர் என்று

இயம்ப முடியாது. அறநெறி அறியாத கொடுங்கோல் வேந்தரும் இருந்திருக்கின்றனர். மனுநீதிச் சோழன் போன்ற நீதி நெறி தவறாத மன்னரும் இருந்திருக்கின்றனர்.

சுவாமி விவேகானந்தர் எத்தனையோ மன்னர்களைச் சந்தித்தார். அவர்களுடன் உரையாடினார், உடனுறைந்தார். ஆனால் அவர்களில் யாருக்கும் "ராஜரிஷி" என்ற பட்டத்தை அவர் வழங்கவில்லை. இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு மட்டுமே சுவாமிகள் "ராஜரிஷி" என்ற பட்டத்தை வழங்கினார்.

அரசனாதல் என்பது எல்லோருக்கும் இயலுவதன்று. யாரோ ஒரு சிலருக்குத்தான் அது வந்து வாய்க்கும். அரசர் ஆனோருள்ளும் ரிஷியின் உயர்நிலை எய்துதல் என்பது எல்லோருக்கும் இயலுவதன்று. பண்பட்ட மனிதன் ரிஷி எனப்படுகின்றான். ஆசைகள் அனைத்தினின்றும் விடுபட்டு ஆத்மாவில் ஆத்மத்திருப்தனாய் அமர்ந்திருப்பவன் ரிஷி எனப்படுகிறான்.

ரிஷித்தன்மை அடைதல் மானுடவர்க்கம் முழுமைக்கும் பொதுவுடைமை ஆகும். அரசுடைமை பொதுவுடைமையன்று. ஆனால் ரிஷித்தன்மை பொதுவுடைமையாகும். யாரும் ரிஷியாகலாம், ஆண்டி ரிஷியாகலாம், அரசனும் ரிஷியாகலாம்; ஏழையும்

ரிஷியாகலாம்; எளியோரும் ரிஷியாகலாம்; ஆணும் ரிஷியாகலாம்; பெண்ணும் ரிஷியாகலாம்; ரிஷியாவதற்குத் தேவை தகுதிதான். பணமோ, பட்டமோ, பதவியோ, பிறப்போ, ஜாதியோ, மதமோ, இனமோ அல்ல. அன்பும், அறனும், பண்பும், பரநாட்டமும், ஆத்மானுபூதியும்தான் ரிஷியாவதற்கு தேவையான தகுதிகளாகும்.

எல்லா அரசர்களும் ரிஷியாவதற்குத் தகுதியுடையவர்களல்லர். அதேபோன்று எல்லா ரிஷிகளும் அரசராவதற்குத் தகுதியுடையவர்களுமல்லர். யாரோ ஒருசிலர்தாம் அரசராகவும், அதே சமயத்தில் ரிஷியாகவும் இருத்தற்குத் தகுதியுடையவராவர். அத்தகையவர்களுள் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியும் ஒருவராவார். ஏககாலத்தில் அரசராகவும், ரிஷியாகவும் இருத்தற்கேற்ற தகுதியை அவர் பெற்றிருந்தார். அதனால்தான் சுவாமி விவேகானந்தர் அவருக்கு "ராஜரிஷி" என்ற பட்டத்தை வழங்கினார்.

ஜனகரை ராஜரிஷி என்று உலகம் போற்றுகிறது. விஸ்வாமித்திரரை உலகம் ராஜரிஷி என்கிறது. ஹரிச்சந்திரனை ராஜரிஷி என்று பகரலாம். புத்தரை ராஜரிஷி என்று பகரலாம். மகாவீரரை ராஜரிஷி என்று பகரலாம். இளங்கோவடிகளை ராஜரிஷி என்று பகரலாம். புகழ்ச்சோழநாயனாரை ராஜரிஷி என்று பகரலாம்.

மெய்ப்பொருள் நாயனாரை ராஜரிஷி என்று பகரலாம். மனுநீதிச் சோழனை ராஜரிஷி என்று பகரலாம். இந்த வரிசையில் வைத்துப் போற்றத் தகுந்தவர்தாம் மன்னர் பாஸ்கர சேதுபதியுமாவார்.

சுவாமி விவேகானந்தர் 1902 ஜுலை 4-ஆம் தேதி தமது 39-ஆம் வயதில் இந்த மண்ணுலக வாழ்க்கையை நீத்தார். சுவாமி விவேகானந்தரது இழப்பு மன்னர் பாஸ்கர சேதுபதியின் உள்ளத்தை மிகவும் பாதித்தது. 1903 டிசம்பர்-27-ஆம் தேதி தமது 35-வது வயதில் மன்னர் பாஸ்கர சேதுபதி இவ்வுலக வாழ்வை நீத்தார். சுவாமிஜியை விட 5-வயது இளையவர். அருடைய தந்தை முத்துராமலிங்க சேதுபதியோ தமது 32-வது வயதிலேயே மண்ணுலக வாழ்வை விட்டுச் சென்றார். "எத்தனை நாட்கள் வாழ்ந்தார்கள் என்பது முக்கியமன்று, எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பது தான் மிகவும் முக்கியமானதாகும்".

"இந்த உலகில் பிறந்த நீ கல்லையும், மண்ணையும், மரக்கட்டையையும் போன்று மடிந்து போய்விடாதே. இங்கு நீ வாழ்ந்ததற்கு அடையாளமாக எதையாவது ஒன்றை விட்டுச் செல்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்பது திருவள்ளுவம்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நீறிஇத் தாம் மாய்ந்தனரே"

என்பது புறநானூறு.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்பது திருவள்ளுவம்.

மனிதன் எத்துணையோ முறைகளில் இன்பத்தைத் தேடுகிறான். உண்ணுதலிலே, உடுத்துதலிலே, உறங்குதலிலே, உரையாடுதலிலே, காணுதலிலே, கேட்பதிலே, ஆடுதலிலே, பாடுதலிலே இப்படி இப்படிப் பலப்பல முறைகளில் இன்பத்தைத் தேடுகிறான். தன்னிடத்தில் இருப்பதைப் பிறர்க்குக் கொடுப்பதிலே இன்பம் உண்டு என்பதைப் பலர் அறியார். கொடுப்பதிலே எத்துணை ஆனந்தம் இருக்கிறது என்பதை எல்லோரும் அறியார். கொடுத்துப் பார்த்தவர்களுக்குத்தான் அது எத்தகைய ஆனந்தம் என்பது தெரியும். அதனை "ஈத்துவக்கும் இன்பம்" என்கிறார் வள்ளுவர்.

ஈத்துவக்கும் இன்பத்தை நன்கு அறிந்தவர் மன்னர் சேதுபதி அவர்கள். கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கை அவருடைய கை. தம்மை நாடிவந்த ஏழை எளியவர்க்கும், பாடிவந்த புலவர்களுக்கும், ஆடிவந்த கலைஞர்களுக்கும்

அள்ளி அள்ளிக் கொடுத்தார். கல்வி வளர்ச்சிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும், கோயில் வழிபாட்டிற்கும், புலவர் பெருமக்களுக்கும் பொன்னையும் பொருளையும் வாரிவாரி வழங்கினார். தமது அரண்மனைக்கு வந்த சிருங்கேரி மடாதிபதி சங்கராச்சாரியாருக்குத் தனது ராஜ்யத்தையே தானமாக கொடுத்துத் திருமுடியையும் அவர் பாதங்களில் வைத்து வணங்கினார்.

மன்னர் பாஸ்கர சேதுபதி தெய்வ பக்தி மிகுந்தவர். சமய நூல்களை நன்கு கற்றவர். திருமுறைகளை நன்கு கற்றுத் தெளிந்தவர். அவரே ஒரு புலவர் பெருமகனாகவும் திகழ்ந்தவர். வாழ்வின் முடிந்த லட்சியம் "இறைவனை அடைதலே" என்பதை நன்கு உணர்ந்தவர். தமது 25-ஆவது வயதிலேயே 1893-ஆம் ஆண்டு ஜனவரி 13-ஆம் தேதி நாட்குறிப்பில் "இறைவனைத் தியானித்துக் கொண்டிருக்கும் போதே தனது ஆவி உடலினின்றும் பிரிய வேண்டும்" என்பதை முன்கூட்டியே குறித்து வைத்துள்ளார். அதேபோன்றுதான் அவரது வாழ்வின் முடிவும் ஏற்பட்டது.

அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள கல்லிடைக் குறிச்சியிலுள்ள திருவாவடுதுறை ஆதீன மடத்தில் 1903-ஆம் ஆண்டு தங்கியிருந்தார். சமயநூல்களை ஓதுவதும், திருமுறைகளைப் பாராயணம் செய்வதும், இறைவனை வழிபடுவதும், தியானிப்பதுமாகக் காலத்தைக் கழித்து

வந்தார். 27-12-1903 ஆம் நாள், அன்று ஆருத்ரா தரிசனம், அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு வழிபாடு, தியானம், பாராயணம் எல்லாம் செய்து முடித்தார். அவருக்கு நெருக்கமான பாகவதர் ஒருவர் அவரைக்காண வந்தார். அவரைத் தேவாரத் திருமுறைகளைப் பாடும்படி வேண்டினார். அவரும் திருமுறைகளை மனமுருகிப் பாடினார். இறுதியாக மோகனராகத்தில் அற்புதமான கீர்த்தனம் ஒன்றையும் பாடி முடித்தார். அவைகளை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்த சேதுபதி அவர்கள் தமது கழுத்தில் அணிந்திருந்த நவகண்டி மாலையைக் கழற்றிப் பாகவதர் கழுத்தில் போட்டார். உத்தரகோச மங்கையில் நடராஜப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் எல்லாம் இன்று நடந்திருக்கும், சிவ சிவ என்று கூறிக்கொண்டே நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தவர் அப்படியே தமது ஊனுடலைத் துறந்து இறைவனில் ஒன்றி விட்டார். அப்பொழுது அவருக்கு வயது முப்பத்தைந்து.

அந்நாளில் மதுரையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த விவேகபானு என்னும் பத்திரிக்கை 1904-ஜனவரி இதழில் பாஸ்கர சேதுபதியின் மறைவு குறித்துப் பின்வருமாறு எழுதியது:

"சேது சமஸ்தானாதிபதியாகிய இம்மன்னர் பெருமான் உலகம் முழுவதும் புகழ் பெற்றவர். சிவநேசச்செல்வர். ஆங்கில பாஷையில் எப்.எ. பட்டம் பெற்றவர். தமிழ் இலக்கிய இலக்கண சாஸ்திர வல்லுநர். ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரசங்கிப்பதில் மிகச் சிறந்தவர். சமயோசிதமாகக் கற்பனை செய்து பேசுவதில் அதி சமர்த்தர். தென்னாட்டுத் தேவாலயங்களில் இவர் பொருட்செல்வம் புகாதவை மிகச் சொற்பமே. 1903-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி காலையில் சிவபதமடைந்தார். இவ்வரசர் செய்த சத்கருமங்களுள் தலைமை பெற்று நிற்பது மதுரைத் தமிழ்ச் சங்கமே. இவர் பிரிவு நம் தமிழ் மொழிக்குப் பெரிதும் நஷ்டம் தரத்தக்கது" என்று எழுதியுள்ளது.

சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவில் நடந்த சிகாகோ சர்வமத மகாசபைக்கு அனுப்பியதில் பெரும்பங்கு வகித்தவர் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியேயாவார்.

சுவாமி விவேகானந்தரும் சர்வமதமகாசபையில் வெற்றிக்கொடி நாட்டி, நான்கு ஆண்டுகள் மேலைநாடுகளில் இந்து சமய வேதாந்தக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்துவிட்டுத் தாயகம் திரும்புகையில் முதன் முதலில்

இராமநாதபுரம் மண்ணில் பாம்பனில்தான் காலடியை வைத்தார்.

மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் தமது மேலைநாட்டுப் பிரயாணத்துக்குச் செய்த உதவியை நன்றிப் பெருக்கோடு பல இடங்களில் சுவாமிகள் நினைவு கூர்கிறார். பாம்பன் மாளிகையிலும், இராமேஸ்வர இல்லத்திலும், இராமநாதபுர மாளிகையிலும், மதுரை, சென்னை மாளிகைகளிலும் மன்னர் பாஸ்கர சேதுபதியோடு சுவாமி விவேகானந்தர் உண்டும், உரையாடியும், உடனுறைந்தும் பல நாட்கள் கழித்திருக்கின்றார்.

இராமேஸ்வரத்தில் சுவாமி விவேகானந்தர் தங்கிய இல்லம் **"விவேகானந்த பாஸ்கரம்"** என்ற திருநாமம் தாங்கித் திகழ்கிறது. தற்சமயம் அந்தக்கட்டிடம் அறநிலையத் துறையிடமிருக்கின்றது. அதனை அறநிலையத் துறையிடமிருந்து பெற்று **"விவேகானந்த பாஸ்கரம்"** என்ற பெயரில் சுவாமி விவேகானந்தருக்கும், மன்னர் பாஸ்கர சேதுபதிக்கும் நூற்றாண்டு நினைவு மண்டபம் ஒன்று எழுப்பலாம் என்று கரூர் ராமகிருஷ்ண ஆஸ்ரமத்தினர் கருதுகின்றனர்.

2002 ஜுலை 4-ஆம் தேதி சுவாமி விவேகானந்தருக்கு நூற்றாண்டு நினைவு நிறைவு நாள்

வருகின்றது. 2003 டிசம்பர் 27-ஆம் தேதி மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு நூற்றாண்டு நினைவு நிறைவு நாள் வருகின்றது. இருவருக்கும் நூற்றாண்டு நினைவு நிறைவு நாள் அடுத்தடுத்து வருகின்றதனால் நினைவு மண்டபத்தை 2001-ல் தொடங்கி 2003-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் தேதிக்குள் முடித்து விடலாம் என்று கருதுகிறோம்.

நினைவு மண்டபம் இரண்டு தளங்களைக் கொண்டதாக இருக்கும். ஒன்றில் பாஸ்கர சேதுபதியின் சிலை வைத்து, சேது மன்னர்களின் சரித நிகழ்ச்சிகளைப் படமாகவும், ஓவியங்களாகவும் வாழ்க்கைக் குறிப்புடன் வரைந்து வைப்பது.

இரண்டாவதில் சுவாமி விவேகானந்தரது திருவுருவச்சிலை வைத்து, அவரது சரிதம் சம்பந்தப்பட்ட படங்களையெல்லாம் வாழ்க்கைக் குறிப்புகளுடன் வரைந்து வைப்பது.

இந்தியாவிலுள்ள புண்ணிய ஸ்தலங்களுள் இராமேஸ்வரம் மிகமிக முக்கியமானதாகும். காசியும் இராமேஸ்வரமும் இந்துக்களுடைய புண்ணிய யாத்திரை ஸ்தலங்களாகும். வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பாலங்களாகத் திகழுவன காசியும் இராமேஸ்வரமும்.

காசிக்குச் செல்லும் தென்னாட்டினர் அனைவரும் இராமேஸ்வரம் சென்று தங்கள் யாத்திரையை நிறைவுக்குக் கொண்டு வருவர். அதேபோன்று இராமேஸ்வரம் வரும் வடநாட்டினர் காசிக்குச் சென்று தங்கள் யாத்திரையை நிறைவுக்குக் கொண்டு வருவர். இந்துக்களை ஒற்றுமைப்படுத்துவதில் காசியும் இராமேஸ்வரமும் ஈடு இணையற்ற ஸ்தலங்களாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக பாரத நாட்டு மக்கள் இந்த இரண்டு ஸ்தலங்களையும் தரிசித்து இறையருள் பெற்றுவருகின்றனர்.

ராமனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது ராமலிங்கம். சிவலிங்கமாயினும் ராமநாத ஈஸ்வரர் என்றும், ராமலிங்கம் என்றும் ராமநாமத்தோடு இணைத்தே அழைக்கப்படுகின்றது. சைவ வைஷ்ணவ சமய பேதமற்ற சமரசக் கோவிலாக இது திகழ்கின்றது.

ராமகிருஷ்ண இயக்கத்துக்கும் இராமேஸ்வரத்துக்கும் நூற்றாண்டுக்கு மேலாக ஒரு இணைப்பு இருந்து கொண்டே இருக்கின்றது. பகவான் ராமகிருஷ்ணரது தகப்பனார் இராமேஸ்வரம் கோவிலுக்கு ஸ்தலயாத்திரையாக நடந்தே வந்திருந்திருக்கின்றார். தமது மக்களுக்கு ராமேஸ்வரர் என்றும், ராம்குமார் என்றும் பெயரிட்டிருக்கின்றார். சுவாமி விவேகானந்தர் இராமேஸ்வரம் இருமுறை வந்து தரிசனம் செய்திருக்கின்றார். அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்; சுவாமி

பிரம்மானந்தர்; சுவாமி சிவானந்தர்; சுவாமி ராமகிருஷ்ணானந்தர்; சுவாமி நிரஞ்சனானந்தர் போன்றோர் இராமேஸ்வரம் வந்து தரிசனம் செய்திருக்கின்றனர். இன்றும் தென்னாடு வரும் ராமகிருஷ்ண மடத்து சாதுக்கள் இராமேஸ்வர தரிசனம் செய்யாமல் செல்லுவதில்லை. சென்ற 2000-ஆம் வருடம் பிப்ரவரி 7-ஆம் தேதி சென்னை ராமகிருஷ்ண மடத்தில் பகவான் ராமகிருஷ்ணருக்கு சர்வமத சமரசக் கோயில் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் நடந்தது. அதில் பங்கு கொண்ட ராமகிருஷ்ண மடத்துச் சாதுக்களும் பிரம்மச்சாரிகளும் சுமார் 200 பேர் ராமேஸ்வரம் வந்து தரிசித்தனர். அன்று தான் விவேகானந்தர் தங்கிருந்த **"விவேகானந்த பாஸ்கரம்"** என்ற இல்லத்தை காணும் பேற்றினைப் பெற்றோம். விவேகானந்த பாஸ்கரத்தைப் பார்த்ததும் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியும், தரையில் விழுந்து புரள வேண்டும் என்பது போன்றதொரு உள்ளக் கிளர்ச்சியும் ஏற்பட்டது. "அப்பொழுதுதான் இந்த இடம் யாரிடத்து இருப்பினும் இதைப்பெற்று, சுவாமி விவேகானந்தருக்கும் பாஸ்கர சேதுபதிக்கும் நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும் என்று சங்கல்பித்துக் கொண்டோம். ராமநாத ஈஸ்வரனையும் பிரார்த்தித்துக் கொண்டோம். எத்துணை பாடுபட்டாயினும் **"விவேகானந்த பாஸ்கரம்"** நூற்றாண்டு நினைவு மண்டபத்தை எழுப்பியாக வேண்டும் என்றும், நல்லோர்

அனைவரும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும், இந்த நல்ல எண்ணம் நிறைவேற இறைவன் அருள் புரிய வேண்டும்'' என்றும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

"எல்லாம் செயல்கூடும் என் ஆனை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே ஏத்து"

என்பது வள்ளலார் வாக்கு.

இராமன் இலங்கைக்கு செல்ல அணைகட்டினான். அதில் சாதாரண வானரங்களும் வயது முதிர்ந்த ஜாம்பவானும், வாலிமைந்தன் அங்கதனும், மகாவீரர் அனுமனும் பங்கு கொண்டனர். ஒரு சிறு அணிலும் தன்னால் இயன்றதை ராம கைங்கர்யமாகச் செய்தது. அந்த அணிலின் சேவையில் மகிழ்ந்த ராமன் அதனை எடுத்து முதுகில் அன்பினோடு தடவிக் கொடுத்தான். அணில் பெற்ற பெரும் பேறு அது.

மானுட உடல் நிலையற்றது; நாம் ஈட்டுகின்ற செல்வமும் நிலையற்றது. உடலும் பொருளும் இரண்டுமே நிலையற்றவைகள். இந்த உண்மையை உணர்ந்த கவிசுப்பிரமணிய பாரதி :

"வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே"

என்று அன்னை பராசக்தியைப் பிரார்த்திக்கிறார். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" பட்டியலில் தம்மைச்

சேர்க்கப் பிரார்த்திக்கிறார் கவிபாரதி.

அழியும் மானிட உடலை அழியாப் பொருளைப்பெறப் பயன்படுத்த வேண்டும். நிலையற்ற செல்வத்தை நிலையான காரியங்களைச் செய்யப் பயன்படுத்த வேண்டும்.

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்"

என்பது திருவள்ளுவம்.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது தொல்காப்பியம். சான்றோர்கள் தனிப்பட்ட ஒரு மதத்துக்கோ, ஜாதிக்கோ, இனத்துக்கோ சொந்தமானவர்களல்லர். அவர்கள் உலகின் பொதுவுடைமை, உலக மக்களின் பொதுவுடைமையுமாவர்.

வங்கத்துப் பிறந்த விவேகானந்தர் வங்க மக்களுக்கு மட்டுமோ, பாரத நாட்டிற்கு மட்டுமோ உரியவரல்லர். அவர் உலகனைத்துக்கும் சொந்தமானவர்.

அதேபோன்று தென்னாட்டில் பிறந்த பாஸ்கர சேதுபதியும் ஓர் இனத்துக்கோ, தமிழகத்துக்கு மட்டுமோ உரியவரல்லர். ஆன்மீக வாழ்வு வாழ்ந்த அருளாளர்களது வாழ்வும், அறநெறிபிறழா அரசர்களது வாழ்வும், வாழ்வாங்கு

வாழ்ந்த மேலோர்களது வாழ்வும், மனித வர்க்கம் முழுமைக்கும் சொந்தமேயாகும்.

விவேகானந்த பாஸ்கரம் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் உறுதுணையாய் விளங்கும். நாட்டு மக்களது சிந்தனையை ஒருமுகப்படுத்தும் கேந்திரமாகத் திகழும். "ஆன்மீகந்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு" என்று கூறிய சுவாமி விவேகானந்தரின் வாக்கை திக்கெட்டும் பறைசாற்றும் முரசாகத் திகழும். இளைஞர்களைத் தேச பக்தியிலும் தெய்வபக்தியிலும் [illegible]டுபடுத்தும் உந்து விசையாகத் திகழும். ஏழை [illegible] எளியவர்களுக்கும் பாமரர்களுக்கும் வாழ வழிகாட்டும் [illegible]ங்கரை விளக்காகத் திகழும். சுருங்கக் கூறின் ஒல்லும் [illegible] கயான் அறிவினை ஓவாதே செய்யும் அறச்சாலையாகத் [illegible]ம். தூய்மையும், தியாகமும், தியானமும் போதிக்கும் [illegible]ாலையாகத் திகழும். சான்றோர்களை உருவாக்கும் [illegible] சங்கமாகவும் விளங்கும். அன்னதானமும், [illegible]ானமும், ஆன்மதானமும், அளிக்கும் [illegible]ாவிலாகத் திகழும். பகவான் ராமகிருஷ்ணர், [illegible]ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய [illegible]யிருக்கும் தென்னகத்தின் தட்சிணேஸ்வரமாகத் [illegible].

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு பிறந்த நாளை (12-1-1963) கொண்டாடும் பாங்கில் கன்னியாகுமரியில் விவேகானந்த பாறை நினைவுச் சின்னம் வடிவெடுத்தது.

அதேபோன்று சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு நினைவு நிறைவு நாளை (4-7-2002) நினைவு கூறும் பாங்கில் இராமேஸ்வரத்தில் **"விவேகானந்த பாஸ்கரம்"** என்ற திருநாமத்துடன் நினைவுச் சின்னம் ஒன்று வடிவெடுக்கின்றது.

கன்னியாகுமரியில் அமைந்திருப்பது சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டுப் பிறந்தநாள் நினைவுச் சின்னம்.

இராமேஸ்வரத்தில் அமைய இருப்பது சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு நினைவு நாள் நினைவுச் சின்னம்.

சுவாமி விவேகானந்தரின் பிறப்பு மறைவு ஆகிய இரண்டுக்கும் உரிய நூற்றாண்டு நினைவுச் சின்னங்கள் தமிழகத்தில் அமைவது தமிழகம் செய்த தவப்பயனேயாகும்!

"அறஞ் செய விரும்பு" என்பது ஔவையின் வாக்கு. நல்லவர்களாக இருப்பதும், நற்செயல்களைச் செய்வதும்

தான் சமய வாழ்வு, அதுதான் கடவுள் வழிபாடு என்கிறார் சுவாமி விவேகானந்தர். நாட்டுக்கு நலம் பல பயக்கும் இந்தத் திருப்பணியை உங்களது வீட்டுக்கு நலம் பயக்கும் நற்பணியாக ஏற்றுக்கொள்ளுங்கள். நாட்டின் மேம்பாட்டை உங்களது வீட்டின் மேம்பாடாகக் கருதுங்கள். உன்னதமான இந்தத் திருப்பணியில் ஒவ்வொருவரும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள். உங்களைச் சார்ந்தவர்களையும் ஈடுபடுத்துங்கள். நாம் எல்லோரும் சேர்ந்து இந்த திருப்பணியை, நாட்டு மக்களுக்கு நலம் பயக்கும் இந்த அறப்பணியை, ஆன்மீகத் திருப்பணியைச் செய்து முடித்து ஆண்டவன் திருவருளைப் பெறுவோமாக.

அன்பும் வணக்கமும்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம்
பசுபதிபாளையம் (P.O)
கரூர்-639 004.

இறைவன் தொண்டில்

என் மகனே! மரணம் நேருவதைத் தடுப்பதற்கில்லை என்றால் கற்களைப் போலவும் கட்டைகளைப் போலவும் செத்து மடிவதைவிட வீரர்களைப் போல இறப்பது மேலானது அல்லவா? நிலையில்லாத இந்த உலகிலே இரண்டொரு நாள் அதிகமாகவே வாழ்ந்து விடுவதனால் பெறப்போகிற பயன் என்ன? வாழ்க்கை என்னும் கத்தி துருப்பிடித்து அழிந்து போவதைவிடத் தேய்ந்து அழிவதே மேலானது. அதிலும் குறிப்பாக, மற்றவர்களுக்கு ஒரு சிறிதளவிற்கு நன்மை செய்வதற்காக அழிந்துபோவது மிகவும் நல்லது.

தன் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரையிலும் உள்ள நாடி நரம்புகளில் பாய்ந்து செல்லும் ஏராளமான ரஜோகுணத்தைப் பெற்ற ஒரு மாவீரன் - ஆன்மிக உண்மைகளை அறிய வேண்டும் என்னும் துணிவும், தேவைப்பட்டால் அதற்காகத் தன் உயிரையும் பணயம் வைக்கவும் தயாராக உள்ள வீரன் - தியாகத்தையே தன் கவசமாகவும் ஞானத்தையே வாளாகவும் ஏந்திய ஒரு வீரன்- இத்தகைய ஒரு மாவீரனே இப்போது நமக்கு மிகவும் தேவைப்படுகிறான். வாழ்க்கையை இன்பம் அனுபவிக்கும் பூஞ்சோலையாக நினைத்து உருகி நிற்கும் காதலனின் மனநிலை நமக்குத் தேவையே இல்லை. மாறாக, வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மனநிலையே நமக்கு இப்போது தேவை.

சுவாமி விவேகானந்தர்



இராமேஸ்வரத்திலுள்ள தற்போதைய விவேகானந்த பாஸ்கர கட்டிடம்.

பாறை அச்சகம், கரூர். ☎ 333388